ந.க.எண். 230/2022/A1

தேர்வு நிலை பேரூராட்சி
அலுவலகம், திங்கள்நகர்.
நாள்: 20-07-2022.

## குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், திங்கள்நகர் தேர்வு நிலை பேரூராட்சியில் 2021-2022 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் இலகுரக வாகனம் (Light Commercial Vehicle) கொள்முதல் செய்திட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 29.07.2022-ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 28.07.2022 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை அதற்குரிய தொகையை திங்கள்நகர் தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்த நமூனா பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், திறப்பு தேதி மற்றும் நேர விவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியுடன் பணிக்கான வைப்புத்தொகையினை "Executive Officer, Thingalnager Town Panchayat" எனும் பெயரில் வங்கி வரைவோலை எடுத்து இணைத்து அனுப்ப வேண்டும்.

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 29.07.2022 ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 03.30 மணிக்கு செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும்.

### கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டம் 2021 - 2022

| வ. எ ண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.) | முன் வைப்பு தொகை ரூ | ஒப்பந்தப் புள்ளி படிவ கட்டணம் ரூ. | ஒப்பந்தக் காரரின் தகுதி | பணி முடிக்க வேண்டி கால அளவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | ஒரு இலகுரக வாகனம் (Light Commercial Vehicle) கொள்முதல் செய்தல். | 737000/- | 7370/- | 1560/- | (Class –V$^{th}$ ) ஐந்தாம் வகுப்பு ஒப்பந்தக்காரரும் அதற்கு மேலும் | 30 நாட்கள் |

#### நிபந்தனைகள்

1. இலகுரக வாகனங்கள் (Light Commercial Vehicle) கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக் குழுவில் டீசல் மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக் குறிப்புகளின்படி (Specifications) வாகனங்கள் இருக்க வேண்டும். மேலும் டீசல் மூலம் இயங்கும் இந்த இலகுரக வாகனத்திற்கு (Light Commercial Vehicle) ஒரு வண்டியின் அடிப்படை விலை ஜி.எஸ்.டி (28 சதவிகிதம்) நீங்கலாக ரூ.5.70 இலட்சம் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால், இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படவேண்டும்.
2. இலகுரக வாகனங்கள் (Light Commercial Vehicle) வழங்கும் நிறுவனங்கள் தங்கள் பொறுப்பில் வாகனத்திற்கான சாலை வரியை (Road Tax) செலுத்தி பதிவு எண் (Registration) பெற்று வழங்கப்பட வேண்டும். மேலும் வாகனத்திற்கு காப்பீடு (Insurance) செய்து வழங்கப்பட வேண்டும்.
3. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 இன் படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் கொள்முதல் ஆணை வழங்கிய மூன்று தினங்களுக்குள் ரூ.50/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட வேண்டும்.
5. இலகுரக வாகனங்கள் (Light Commercial Vehicle) கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக் குழு அனுமதி வழங்கியுள்ள விவரக் குறிப்புகள் (Specifications) மற்றும் விலை விகிதம் (Rate)

அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதிச் சான்றிதழ் அளித்த பின்பே சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதிமுறைகளின்படி பட்டியல் தொகை வழங்கப்படும்.

6. உரிய காலத்திற்குள் வாகனங்கள் விநியோகம் செய்ய தவறினால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படும்.
7. வாகனங்கள் விநியோகம் செய்யப்பட்டு ஓராண்டு காலத்திற்கு வாகனத்தில் ஏற்படும் குறைபாடுகளை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரே தனது சொந்த செலவில் சீரமைக்கும் வகையில் நிபந்தனைகள் ஒப்பந்தப் பத்திரத்தில் இடம் பெற வேண்டும்.
8. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி மற்றும் சரக்கு சேவை வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.
9. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட பணிக்கு மூன்றாண்டுகளுக்கு குறையாமல் முன் அனுபவம் உள்ளதற்கான ஆவணங்கள் இணைக்கப்பட வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்படும் போது விற்பனை வரி துறையில் பதிவு பெற்றுள்ளதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
11. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டது. பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்கு பிறகு கொள்முதல் ஆணை வழங்கப்படும். பணி ஆணை வழங்கப்படும் போது கூடுதல் 1% வைப்புத்தொகை செலுத்தப்பட வேண்டும்.
12. கொள்முதல் செய்யப்பட்ட வாகனங்களுக்கான பட்டியல் தொகை வழங்கப்படும் போது ஜி.எஸ்.டி. 2% பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
13. அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் வைப்புத் தொகை இன்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதும் இன்றி தள்ளுபடி செய்யப்படும்.
14. செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து, தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.
15. மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்ட நிறுவனங்கள் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம்.
16. மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் https://tntenders.gov.in மற்றும் http://tenders.tn.gov.in/ இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவிறக்கம் செய்தும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கலாம்.
17. இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

20/7/22

செயல் அலுவலர்,
திங்கள்நகர் தேர்வு நிலை பேரூராட்சி.

20/7/2022

பெறுநர்

1. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்
2. அலுவலக அறிவிப்பு பலகைக்கு.

நகல் :–

1. உதவி இயக்குநர், (பேரூராட்சிகள்) நாகர்கோவில் மண்டலம், அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள், கன்னியாகுமரி மாவட்டம் (தொகுப்பு) அவர்களுக்கு தகவலுக்காக.
3. இளநிலை பொறியாளர், திங்கள்நகர் தேர்வு நிலை பேரூராட்சி (தொகுப்பு)
4. விளம்பர பலகை